[1979 மார்ச் 10

ராஜபாளையம்—நாகலாபுரம் பேருந்து வழித்தடம்.

* வினா எண். 329—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம் ராஜபாளையத்திலிருந்து திருநெலவேலி மாவட்டம் நாகலாபுரம் வரையுள்ள வழித்தடத்தில் ஓடிக் கொண்டிருந்த P.R.C. பேருந்துக்குப் பதில் ஒரு தனியார் பேருந்துக்கு அந்த வழித் தடத்தில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(ஆ) ஆம், எனில், அதற்குரிய காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) மச்சாபுரத்திலிருந்து கடல்குடி வரை சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து வழித்தடத்தை 1973 ஆம் ஆண்டு மே திங்கள் 8 ஆம் நாள் அன்று பாண்டியன் போக்குவரத்துக் கழகம் ஏற்றுக் கொண்டது. பாண்டியன் போக்குவரத்துக் கழகம் 1974 ஆம் ஆண்டு மே திங்கள் 1 ஆம் நாள் முதல் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20 நாள் வரை தற்காலிக அனுமதியின் பேரில் பேருந்து ஒன்றினை இயக்கி வந்தது. தற்காலிக அனுமதியை மாற்றி முறைப்படுத்துவதற்கான விண்ணப்பங்கள் 1939 ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் கோரப்பட்டன. அவ்வாறு வந்த விண்ணப்பங்களில் சாத்தூரைச் சேர்ந்த தனிப்பட்ட உரிமையாளர் (சீனிவாசா டிரான்ஸ்போர்ட்) பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தை விட அதிக மதிப்பெண்கள் பெற்றதனால் இராமநாதபுர மாவட்டப் போக்குவரத்து அதிகாரி மேற்படி தனி உரிமையாளருக்கு மேற்படி வழித்தடத்தில் பேருந்து விடுவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார். இந்த அனுமதியின் பேரில் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20 ஆம் நாள் முதல் மேற்கூறிய தனியார் பேருந்து ஒன்று மேற்படி வழித் தடத்தில் இயங்கி வருகிறது. மாவட்டப் போக்குவரத்து அதிகாரியின் முடிவினை எதிர்த்து பாண்டியன் போக்குவரத்துக் கழகம் மாநில போக்குவரத்து மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் (State Transport Appellate Tribunal) வழக்கு ஒன்றினைத் தொடர்ந்துள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, தனியார் பஸ்கள் ஓடக்கூடிய வழித்தடங்களை கொஞ்சங் கொஞ்சமாக நாட்டுடமை பஸ் வழித்தடங்களாக ஆக்குவதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கை என்று சொல்லப்பட்டது. அந்த வழித் தடத்திலே ஆயிரம் ரூபாய்க்கு மேல் தினம் வசூலாகிக் கொண்டிருக்கிறது. அங்கு ஏற்கனவே இரண்டு ஆண்டுகளாக ஓடுகின்ற

1979 மார்ச் 10]

பி.ஆர்.சி. பஸ்ஸுக்குப் பதிலாக, புதிதாக தனியார் பஸ்ஸுக்கு, ஆளுங்கட்சியைச் சேர்ந்த சிலர் அதிகமாக வற்புறுத்தியதன் காரணமாக, அனுமதி கொடுக்கப்பட்டது என்று சொல்லப் படுகிறது. ஆகவே அந்நிலையை மாற்றி, தனியார் பஸ்ஸுக்குப் பதிலாக, நாட்டுடைமையாக்கப்பட்ட பஸ்ஸுக்கு—அதாவது பாண்டியன் போக்குவரத்துக் கழகத்துக்கு அனுமதி வழங்க அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லை, அடிப்படை இல்லை என்று கூறிக் கொள்கிறேன். அந்தக் குறிப்பிட்ட வழித்தடத்தில், மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் தற்காலிக உரிமம் பெற்றுத்தான் பாண்யன் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஓடியது. தற்காலிக உரிமம் பெற்றால் 4 மாதங்களுக்குத்தான் ஓட்ட முடியும். அதற்குப் பிறகு முறையான உரிமம் வழங்கப்பட வேண்டும். அதற்காக. ஆர். டி. ஏ. மீட்டிங் மூலமாகவே, தனியாரும், அரசுடைமைப் போக்குவரத்துக் கழகமும் போட்டியிட்டு யாருக்கு அதிக மதிப்பெண்கள் என்ற அடிப்படையில் உரிமம் வழங்கப்பட்டிருகிறது. 2 மதிப்பெண்கள் தனியாருக்குக் கூடுதலாகக் கிடைத்து விட்டதாகத் தெரிந்திருக்கிறது. இருந்த போதிலும், அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்குத்தான் கிடைத்திருக்க வேண்டுமென்று மாநிலப் போக்குவரத்து மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தில் (State Transport Appellate T.ibunal) வழக்கு தொடரப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: அரசாங்கப் போக்குவரத்துக் கழகத்தைவிட, தனியார் பஸ் போக்குவரத்தை நடத்தக்கூடியவர்களுக்கு எப்படி இரண்டு மார்க்குகள் கூடுதலாகக் கிடைக்க முடியும். இதைவிட திறமையாகவோ, ஒர்க்ஷாப்போ தனியார் வைத்திருக்க முடியுமா? ஆகவே, அமைச்சரது பதில் சரியான பதிலாக எனக்குப் படவில்லை. ஆகவே, இனிமேலாவது அம்மாதிரி தவறுகள் நடக்காமல் இருக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என அறியவிரும்புகிறேன்.

[முற்பல் 9–50]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, அது சரியான பதில் இல்லை என்று சொல்வது சரியல்ல — சரியான பதில்தான். காரணம் மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் வொர்க்ஷாப் என்று சொல்லப்படுகிற தொழிற்சாலையை வைத்திருப்பவர்களுக்கு 2 மார்க் உண்டு என்றிருக்கிறது. அந்தக் குறிப்பிட்ட கிராமத்தில் தனியாருக்கு வொர்க்ஷாப் இருக்கிறது. அதனால் அந்த 2 மதிப் பெண்கள் கூடுதலாக தனியார் பெற்றதனால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அது

சட்டப்படி வழங்கப்பட்டது. அது சட்டத்தில் உள்ள குறை என்றால் அதனை மாற்றியமைக்க அரசு ஆலோசனை செய்யும். ஆனால் அதன் அடிப்படையில்தான் பாண்டியன் போக்குவரத் துக்கழகத்திற்கு இரண்டு மதிப்பெண்கள் குறைவாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ,: வினா எண் 330......

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே அது என்னுடைய மாவட்டம் அதைப்பற்றி நான்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் அமைச்சர் பதிலளித்து விட்டார்—நேரத்தை இப்படி.........

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே — மாண்புமிகு உறுப் பினர் அது அவருடைய மாவட்டம் என்ற அளவிலே பேச விரும்புகிறார். அமைச்சர் சொல்லும்போது மச்சாபுரத்திலிருந்து கடல்குடி என்று சொன்னார். இரண்டு ஊர்களுமே கிடையாது. மச்சாபுரத்திலிருந்து கடல்குடி என்று இருக்க வேண்டும். ஒரு வேளை அமைச்சருக்கு ஆங்கிலத்தில் டைப் பண்ணி கொடுத் திருப்பார்கள். அதை தன்னுடைய மாவட்டம் என்ற முறை யிலே உறுப்பினர் திருத்த விரும்புகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு நீங்கள் யோசனை சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் யோசனை சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. கேள்வி எண் 330.

செங்கம்—வளத்தி பேருந்து வழித்தடம்.

*வினா 330—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் செங்கத்திலிருந்து காஞ்சி திருவண்ணாமலை வழியாக வளத்தி செல்லும் தனியார் பஸ் ஆண்டுக்கணக்கில் தடத்தில் செல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், உரிமையாளர் மீது அரசு எடுத்துள்ள, நடவடிக்கை என்ன ?

(இ) தடத்தில் அரசு பேருந்து விட நடவடிக்கை எடுக் குமா ?